*1990 ஏப்ரல் 9]*

அதிகமாக இருக்கின்றன. அந்த நெருக்கடி மிகுந்த இடங்களில் உள்ள மக்கள் கருத்தைக் கேட்டு, அரசு அதற்கான முயற்சி எடுத்து பரிசீலிக்குமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** தலைவர் அவர்களே, மக்களுடைய பிரதிநிதியாகிய நீங்களே மக்களுடைய கருத்தைப் பிரதிபலிக்கும்போது, மக்களைத் தனியாகக் கேட்கவும் வேண்டுமா ?

**திரு. பெ. சீனிவாசன் :** தலைவர் அவர்களே, இந்த ஒரு வழிப் பாதையை அப்படியே தொடர்ந்து நடத்துவதினால், ராஜா அண்ணாமலை மன்றத்திற்குப் பக்கத்திலே இருக்கக்கூடிய எம். யூ. சி. சாலையையும், இந்தப் பக்கம் போகிற வண்டிகளை வரிசையாக நிறுத்தக்கூடிய ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** தலைவர் அவர்களே, அந்தப் பக்கம், இந்தப் பக்கம் என்று சொன்னால், எந்தப் பக்கம் என்று புரியவில்லை. (சிரிப்பு).

**திரு. பெ. சீனிவாசன் :** தலைவர் அவர்களே, ராஜா அண்ணாமலை மன்றத்திற்குப் பக்கத்திலே இருக்கிற எம். யூ. சி. Madras Union Club அந்தச் சாலையிலே 6-ஏ, 6-பி ஆகிய வண்டிகள் நிற்கின்றன. நான் ஒரு நீண்டகால பஸ் பிரயாணி. எனவே அதை வைத்துச் சொல்கிறேன். அந்த இடத்திலிருந்து இங்கே திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம் இருக்கிற சாலை வரை அதை ஒரு வழிப்பாதையாக மாற்றலாம். மேற்கே செல்கிற வண்டிகளை இங்கே நிறுத்தலாம். அதை அமைச்சர் அவர்கள் பரிசீலிப்பாரா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கருத்தையும் பரிசீலிக்கலாம்.

### புதிதாகப் பேருந்து நிலையம் அமைத்தல்.

***1373—திரு. கே. ஆர். சுந்தரம் :**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

வட ஆற்காடு-டாக்டர் அம்பேத்கார் மாவட்டம், குடியாத்தம் நகரில் புதிதாக பஸ் நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி :** தலைவர் அவர்களே,

குடியாத்தம் நகரில் பேருந்து நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு எதுவும் நகராட்சியிடமிருந்து அரசுக்கு வரவில்லை.

திரு. கே. ஆர். சுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடியாத்தம் நகரத்தில் உள்ள பேருந்து நிலையம் மக்களுக்குப் பயன்படாத முறையில் மிகவும் பழுதடைந்துள்ளது. அதற்குப் பின்புறம் உள்ள இடத்தை ஆர்ஜிதம் செய்து பஸ் நிலையத்தை விஸ்தரிக்க வேண்டும் என்று 1983 ஆம் ஆண்டிலே அரசுக்குப் பரிந்துரை செய்யப்பட்டதாக அறிகிறேன். தற்சமயம் அந்த இடத்தை உபயோகப்படுத்துவதற்கு அரசு நிதி உதவி செய்தால், அந்த இடத்தை ஆர்ஜிதம் செய்து, புதிய பஸ் நிலையத்தை மக்களுக்குச் சௌகரியமாக கட்ட முடியும். ஆகவே அதற்கான முயற்சியிலே, அரசு நிதி உதவி செய்யுமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : தலைவர் அவர்களே, தற்போது உள்ள பேருந்து நிலையத்தை விரிவுபடுத்த வேண்டும் என்றால், விளைச்சல் நிலங்களைக் கையகப்படுத்த வேண்டியது இருக்கும். அவ்வாறு கையகப்படுத்தி விரிவுபடுத்தினாலும், பெருகிவரும் எதிர்காலப் போக்குவரத்தை மனதில் வைத்துப் பார்த்தால், நெருக்கடியை தீர்க்க முடியாத நிலை உள்ளது. அரசுப் புறம்போக்கு நிலமாக உள்ள ராபின்சன் குளத்தில் பேருந்து நிலையம் அமைத்தால், பிற்காலத்தில் ஏற்படக்கூடிய போக்குவரத்து நெருக்கடியை தாங்கக்கூடிய நிலையில் அது இல்லை. ஆகையினால், ஆர்.எஸ். சாலையில் உள்ள நகராட்சி மேல்நிலைப் பள்ளி விளையாட்டு மைதானம் 3.13 ஏக்கர் நிலத்தில் பேருந்து நிலையம் அமைக்க குடியாத்தம் நகர மன்றம் எண்ணியது. ஆனால் அந்த இடமும் ஜனநெரிசல் உள்ள இடம். ஆதலாலே வெளியே வைத்து பராமரிக்க வேண்டியதாலும், பேருந்து நிலையம் அமைப்பதற்கு ஏற்றதில்லை என்று நகர ஊரமைப்புத் துறை இயக்குநரால் தெரிவிக்கப்பட்டன. எனவே பேருந்து நிலையத்தை அமைக்க தகுந்த இடம் நகர மன்றத்தால் தெரிவு செய்யப்பட்டு, செயற்குறிப்பு கிடைக்கப் பெற்றதும் பரிசீலிக்கப்படும்.

9-35 மணி

திரு. கே. ஆர். சுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த மாதம் மாவட்ட ஆட்சித் தலைவர் குடியாத்தம் நகருக்கு நேரிலே வந்திருந்தார்கள். பேருந்து நிலையத்தை பார்வையிட்டார்கள். நகர மன்றத் தலைவரும் நானும் உடனிருந்தோம். தற்போதுள்ள நகரசபை கட்டிடத்

தையும், அருகிலே உள்ள மக்கள் பயன்படுத்தாத ஒரு பள்ளிக் கட்டிடத்தையும் பேருந்து நிலையமாகப் பயன்படுத்தலாம் என்று அறிவுரை கூறினார். அதை ஏற்று குடியாத்தம் நகர மன்றம் தீர்மானம் நிறைவேற்றி அரசுக்குத் தெரிவித்திருப்பதாக அறிகிறேன். அத்தகை அறிவிப்புகள் ஏதேனும் வந்திருந்தால், அதன் மீது தக்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : தலைவர் அவர்களே, நகர ஊரமைப்புத் துறைதான் இதைத் தேர்வு செய்ய வேண்டும். அவர்கள் இது தகுந்த இடம் இல்லை, வேறு இடம் பார்க்க வேண்டுமென்று அரசுக்குக் குறிப்பு அனுப்பியிருக்கிறார்கள்.

திரு. ப. சுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வட ஆற்காடு—அம்பேத்கார் மாவட்டத்தில் குடியாத்தம் மட்டுமல்லாமல், திருப்பத்தூர், வாணியம்பாடி போன்ற பேருந்து நிலையங்கள் எல்லாம் நெரிசல் அதிகமாகியிருக்கின்ற காரணத்தினால் விபத்துக்கள் ஏற்படுகின்றன. அதுபோன்று வட ஆற்காடு—அம்பேத்கார் மாவட்டத்தைப் பொறுத்த அளவிலே பேருந்து நிலையத்தை விரிவுபடுத்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : பேரவைத் தலைவர் அவர்களே, இது குடியாத்தம் நகராட்சி சம்பந்தப்பட்ட வினாவாகும்.

திரு. வெ. இராசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது தனிக் கேள்வியாக இல்லாவிட்டாலும் தொடர்புடைய கேள்வி என்பதால் இதைக் கேட்கிறேன். குளத்தூர் தொகுதியிலே கீரனூர் என்பது தாலுக்காவினுடைய தலைமையிடமாகும். கரூர், திருச்சியிலிருந்து இராமேஸ்வரம், இராமநாதபுரம் வழியாக நிறைய பேருந்துகள் செல்லுகின்றன. ஆகவே இது தாலுக்கா தலைமையிடமாக இருப்பதால், அங்கே புதிய பேருந்து நிலையம் அமைக்க வேண்டுமென்றும் அதே நேரத்தில் விராலிமலை.............
(மணியடிக்கப்பெற்றது).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக் கேட்பவர்கள் ஒன்றைக் கவனிக்க வேண்டும். தொடர்பற்ற கேள்விகளைக் கேட்டால், தொடர்ந்து வாய்ப்புகளைக்கூட மறுக்க நேரிடும்.